**செய்தி வெளியீடு எண்: 493** **நாள் : 09.10.2015**

## <u>செய்தி வெளியீடு</u>

## நிதி (வழிவகைகள்–II)த் துறை,
## நாள் அக்டோபர் 9, 2015

மொத்தம் **ரூபாய் 1,500.00 கோடி** மதிப்புள்ள பங்குகள் வடிவிலான **10 ஆண்டு** கால பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை–கோட்டை அலுவலகத்தில் **அக்டோபர் 13, 2015,** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 12.00 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution(E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **அக்டோபர் 13, 2015** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, சென்னை–9.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**